விலைகள்: நாள்து

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

கடந்த: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 24 ஞாயிற்றுக்கிழமை [10-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 341

தென்னிலங்கையில் மீண்டும் மர்மப் பயங்கரக் குழுக்கள்!

கட்டுப்படுத்த அரசிடம் கோரிக்கை

கொழும்பு, நவம்பர் 10

தென் இலங்கையில் மீண்டும் மர்மப் பயங்கரக் குழுக்களின் நடமாட்டம் தலைதூக்கி உள்ளதாக ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு முறையிடப்பட்டுள்ளது.

அன்னையர் முன்னணியின் பாதுகோட்டை மாவட்ட விதாபக உறுப்பினரும், அம் கதந்திரக் கட்சி எம். பி. மான மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் "கண்ணுக்குத் தெரியாத" மர்மக் குழுக்களின் நடமாட்டம் குறித்துத் தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்த மர்மப் பயங்கர குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த பொருத்தமான நடவடிக்கை

(5 ஆம் பக்கம் பார்க்க)

'சார்க்' குழம்பிய விவகாரம்; புதிலடிக்கு பிரேமா தயார்?

மணிலா, நவ. 10

சார்க் மாநாட்டை இந்தியா குழப்பியதாகக் கருதப்படுவதை அடுத்து பெரிதும் ஆத்திரமடைந்திருக்கும் இலங்கை அரசு சார்க் அமைப்பில் இருந்து வெளியேறக் கூடும். அல்லது இந்தியாவுக்கு எதிராக கடுமையான போக்கைக் கையாளக்கூடும்;

— இவ்வாறு ஏ. எவ். பி. செய்தியாளரை மேற்கோள் காட்டி வெளிநாட்டு வானொலி அறிவித்தது;

இந்த விடயத்தில் தேர்தல் வேட்பாளர்களுக்கும் ஜனாதிபதி பிரேமதாஸா விரைவில் பதில் நடவடிக்கையில் இறங்கக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது;

சார்க் மாநாட்டை ஒத்தி வைக்க நேபாளம் மற்றும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

அப்பாடா..... சோப்பு வந்திட்டுதாம் |வடிவா குளிக்க வேணும்.....!

புலிகள் எவ்வேளையிலும் தாக்கலாம் என எதிர்பார்த்து

படையினர் எந்நேரமும் மண்மூடைகளின் பின்னால்!

திருமலை நகரில் இந்தக் காட்சி

கொழும்பு, நவ. 10

திருகோணமலை நகரில் விடுதலைப் புலிகள் எந்நேரமும் தாக்குதல் நடத்தலாம் என்று எதிர்பார்த்து, மண் மூடைகளின் பின்னாலேயே இராணுவத்தினர் உஷார் நிலையில் உள்ளனராம்.

திருகோணமலைக் மாவட்டத்தில் இராணுவத்தினர் உஷார் நிலையில் உள்ளனராம்.

திருகோணமலைக் மாவட்டத்தில் நேரில் சென்று பார்த்த செய்தியாளர் ஒருவர் "சண்டே ஐலண்ட்" பத்திரிகையில் இவ்வாறு எழுதியுள்ளார்;

திருமலை நிலைமை குறித்து அவர் வெளியிட்டுள்ள ஏனைய சில தகவல்கள் வருமாறு:-

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவத்தின் சோதனை நிலையங்கள், மினி முகாம்கள் மற்றும் முகாம்கள் 125 உள்ளன;

குறைந்தது 20 பொலிஸ் நிலையங்கள் இம்மாவட்டத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தான் பிரதமரின் பேச்சு:

ஸ்ரீலங்கா அரசிடம் இந்தியா ஆட்சேபம்

கொழும்பு, நவ. 10

கொழும்பில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இந்திய எதிர்ப்புப் பேச்சு நிகழ்த்த அனுமதித்ததற்காக ஸ்ரீலங்காவிடம் இந்தியா தனது ஆட்சேபத்தை நேற்றுத் தெரிவித்தது;

கொழும்பில் உள்ள பிரதி இந்தியத் தூதர் சென்றோர்து ஆட்சேபக் குறிப்பை ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சின் கிரேஷ்ட அதிகாரியிடம் கையளித்தார்.

ஸ்ரீலங்கா அரசு தமக்கெதிராக மேற்கொண்ட வரவேற்புபசாரத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் பாகிஸ்தான் பிரதமர் ஷெரீப், காஷ்மீர் பிரச்சினையைப் பிரஸ்தாபித்திருந்தார்.

அப்படி பிரதமர் ஷெரீப் பேசுவதற்கு ஸ்ரீலங்கா அனுமதித்ததை ஆட்சேபித்தே இக் குறிப்பு கையளிக்கப்பட்டிருக்கிறது.

(உ-எ)

சுவிஸ்பிரதிநிதி கொழும்பில்

யாழ்ப்பாணம், நவ. 10

கொழும்பு வந்து சேர்ந்துள்ள கவிடன் உப்சால் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. பீற்றர் சோக் யாழ்ப்பாணம் வர ஸ்ரீலங்கா அரசிடம் அனுமதி கோரி, அதற்காகக் காத்திருக்கிறார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன;

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சில மத்திய ஸ்தாபனங்களில் இவர் நடுவராக வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமதுமுயற்சியைத் தொடர்வதற்காக கடந்த வாரம் அவர் மீண்டும் கொழும்பு வந்து சேர்ந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது;

(உ-8)

வட்டமிட்ட அவ்ரோ

யாழ்ப்பாணம், நவ. 10

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று கிளிநொச்சி நகரப் பகுதிக்கு மேல் சுமார் அரை மணி நேரம் வட்டமடித்துச் சென்றது. இதனால் நகரில் பதற்றம் நிலவியது;

(உ-15)

நாளை முதல் பங்கீட்டுக்கு சவர்க்காரம் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 10

"லிக்வி" கப்பல் மூலம் தனியார் வர்த்தகரினால் எடுத்து வரப்பட்ட சவர்க்காரம் மற்றும் சலவைப் பவுடர் வகைகள் நாளை முதல் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படவிருக்கின்றன.

பாவனையாளர் பாதுகாப்புக் குழுவின் தலைவர் என்ற முறையில் யாழ் வேதாபர், சமர்ப்பித்த வந்த வர்த்தக நிறுவனத்தினருடன் பேச்சு நடத்தினார்;

அதனை அடுத்து பங்கீட்டு அடிப்படையில் அவற்றை விநியோகிக்க இணக்கம் காணப்பட்டது.

சவர்க்காரங்களின் விலை மற்றும் குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டிய சவர்க்கார அட்டைகளின் எண்ணிக்கை ஆகியவை பற்றி இன்று முடிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது;

(உ-8)

ஆயுதங்களுடன் 2 படகுகள் இந்திய படையிடம் சிக்கின?

பத்துப் பேரும் கைதாகினராம்

சென்னை, நவ. 10

கிழக்குப்பூரிவிருந்து ஆயுதங்களைக் கடத்தி வந்ததாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளின் இரண்டு சிறிய படகுகளை காரைக் கடற்பகுதியில் இந்திய கடற்படையினர் கடந்த வெள்ளிக்கிழமை கைப்பற்றினர் என்று இந்திய வானொலி அறிவித்தது;

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 10 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது;

உயர்சக்தி வாய்ந்த வயர்லெஸ் கருவிகளையும், வெடிப்பொருள்களையும், ஏரியல்களையும், வெடிகுண்டுகளைப் பயன்படுத்துவதற்கான பட்டரிகளையும் ஏற்றிக்கொண்டு வந்த அந்த இரண்டு படகுகளையும் ஜ. என். என். 'சரயு' கப்பலைக் கப்பலும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

மன்னாரில் வெடித்தது வெளிநாட்டுக் குண்டு?

கொழும்பு, நவ. 10

குருநாகல் மாவட்டம் பன்னல நகரில் கடந்த வாரம் சாமிலி திசாநாயக்க நடத்திய கூட்டத்தில் வெடித்த குண்டு, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டதாக இருக்கலாம் என்று பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது;

குண்டு வெடிப்பு இடம் பெற்ற இடத்தில் இருந்த சில தடயப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும்—

அவரது அறிக்கை கிடைத்ததும் இது சம்பந்தமாக மேலதிக விவரங்கள் தெரிய வரலாம் எனவும் பொலீஸ் வட்டாரங்களை ஆதாரம் காட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

தொண்டா இவ்வாரத்தில் இந்தியா செல்வார்

இம்மாதம் 18 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெறும் உல்லாசப் பிரயாணத்தை சம்பந்தமான மாநாடு ஒன்றில் பங்குபற்றுவதற்காக அமைச்சர் தொண்டமான் இந்தியா செல்லவிருக்கிறார்.

புதுடில்லி விஜயத்தின் போது—

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்துக் குறித்தும், இந்திய—ஸ்ரீலங்கா கடல் எல்லைப்புறத்தில் கைப்பிடிக்கப்பட்ட வேண்டிய நடைமுறையை இலகுவாக்குவது மற்றும் அமைச்சர் தொண்டமான் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது;

(உ-8)

புத்தளம், மன்னாரில் சில பகுதிகளில் நடமாடுவதற்கு இன்று முதல் தடை

புத்தளம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள பின்வரும் பகுதிகள் இன்று முதல் (மறு அறிவித்தல்வரை நடமாட்டத்துக்குத் தடை செய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் கரடிக்குளி, தேக்கம் கிராமம் உள்ளடங்கலாக மரிச்சுக்கட்டி—

புத்தளம் மாவட்டத்தில் பூக்குளம் கிராமம் உள்ளடங்கலாக குறிப்பிட்ட மேலும் சில பகுதிகள் ஆகியவையே நடமாட்டத்துக்குத் தடை செய்யப்பட்ட பிரதேசங்களாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது;

(ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

தேவை

வவுனியாவில் வசிக்க வாடகை இல்லாத பெண்பிள்ளைகள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் மாலை 3.00 தொடக்கம் 4-30 வரை. டாக்டர் எம். கருணாதரன், 33 (101), பலாலி வீதி, யாழ்ப்பாணம். (18698)

வந்தி அலுவலர் – ஆசிரியரின் ஒரு வயது குழந்தையை பராமரிக்க அனுபவம் வாய்ந்த, நோய்வாய்ப்படாத, 40 - 50 வயதிற்குட்பட்ட பெண் தேவை. பராமரிப்பு நேரம்: காலை 7-00 — மாலை 5-00 மணிவரை. நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 825, C/o. உதயன். (4386)

மணமகன் தேவை

குற்றமற்ற படித்த 30 வயது பெண்ணிற்கும், 7 இல் செவ்வாயுள்ள 24 வயது மணப்பெண்ணுக்கும், T. A. எக்வுண்டன், எஞ்சினியர் மணமகன் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (18705)

33 வயது பட்டதாரி ஆசிரியைக்கு பூசம், புனர்பூசம், மிருகசீரிடம், சுவாதி, உத்தராடம், பூரட்டாதி, அவிட்டம், உத்தராடம், சித்திரை, உத்தரம், பரணி, ரோகிணி, திருவோணம் போன்ற ஒரு நட்சத்திரத்திலிருந்து தகுந்த உத்தியோக மணமகன் தேவை. தொடர்பு: 249, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். (18710)

மணப்பெண் தேவை

கனடா, சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி பிரஜாவுரிமை உள்ள மணமகன்களுக்கு 20, 27 வயதுக்கு இடைப்பட்ட மணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (18704)

நேர்சே Male Nurse 27 வயதுக்காரருக்கும், 30 வயது பலாலி ஆசிரியருக்கும், செவ்வாய்க் குற்றமுள்ள 31 வயது சைவபோசன ஆசிரியருக்கும், தேவை மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (18706)

வினாத்தாள் [ஆண்டு 4, 5]

புலமைப் பரிசில், பிரவேச பரீட்சாலை அனுமதி மாதிரி வினாத்தாள் ஆண்டு 5, 10-11-91ஞாயிறும், ஆண்டு 4, 17-11-91 ஞாயிறும் வெளியிடப்படும். பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (18438)

நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ் ரி. மெடிகல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (4326)

றோனியோ

நடைபெறுகிறது. றோனியோ வேலைகள் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும். அறிவகம் புத்தகசாலை, கெலிண்டன் சந்திக்கு அருகாமை. (றோனியோ பேப்பர் விற்பனைக்குண்டு). (கி/0782)

தவறி விட்டது

தம்பியப்பா திருவருட்செல்வம் (தயாளன்) ஆகிய எனது சைவாள அட்டை 420221657 V 23-10-91 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 37/A வைமன் வீதி, யாழ்ப்பாணம் என்ற இடத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (18702)

சனி மாற்றம்

மீண்டும் சனி மாற்றமும், 20-11-91 செவ்வாய் மாற்றமும் எல்லாராசிகளின் மீனங்கள். ரூபா 7/- எங்கும் விற்பனைவாகின்றன ரகுநாதன் பதிப்பகம், யாழ்ப்பாணம். எழுதியவர் சுதர்சன். கணித்தவர் நவாலியூர் (சே திடர்) சின்னத்தம்பி தம்பு (18441)

கருத்தரங்கு

குருநகர், நவ. 10

யாழ். பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் இன்று மாலை 4-30 மணிக்கு "தமிழர் பண்பாடு" என்னும் பொருளில் கருத்தரங்கு ஒன்று நடைபெறும். (உ-51)

O/L Paper Classes

நடைபெறுகின்றன.

10 - 11 - 91 ஞாயிறு

பி. ப. 2 மணி
விஞ்ஞானம்
திரு. J. R. சூரி

பி. ப. 3 மணி
சமூகக்கல்வி
திரு. சி. ஸ்ரனிஸ்லொஸ்
ஸ்ரார்- அரியாலை
ஸ்ரான்லி லொறி அருகில்)

(18708)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.

அறிவித்தல்

தற்காலிக ஆங்கில போதனாசிரியர் தரம் 111

மேற்படி பதவிக்கான 1991-11-12 (செவ்வாய்க் கிழமை) நடைபெற இருந்த நேர்முகப் பரீட்சை அன்றைய தினம் நடைபெறமாட்டாது என்பதை அறியத்தருகிறேன்.

நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

– பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-11-09

(சி-0889)

தனியார் கொண்டுவரும் உணவுப் பொருள்:

கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்யும்

யாழ். குடாநாட்டுக்குள் தனியார் கடுதலான அளவு உணவுப் பொருள்களைக் கொண்டு வந்தால் நியாயமான விலையில் அவற்றை கொள்வனவு செய்யப் படும். நோக்கு சங்கங்கள் தயாராக உள்ளன.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் இந்தவலத் தெரிவித்தார்.

கொம்படிப் பாதை ஊடாகப் பல பிரமங்களுக்கு மத்தியில் கொண்டு வரப்படும் பொருள்களுக்கு புதிய உச்ச விலை நிர்ணயிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

தனியார் பொருள்களை கொண்டு வருவதில் உள்ள கஷ்டங்களைத் தெரிவித்தால் அவற்றுக்கு பரிகாரம் காணப்படும் என்றும் அவர் கூறினார். (த-3)

ராஜீவ் கொலை:

ஐந்து சந்தேக நபர்களையும் பிணையில் விட அனுமதி மறுப்பு

சென்னை, நவ. 10

ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 5 பேரின் பிணை மனுக்களை, இவ்வழக்கை விசாரித்து வரும் தனி நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். எம். சித்தீக் நேற்று முன்தினம் நிராகரித்தார்.

இந்த வழக்கு சம்பந்தமாக புலன் விசாரணை முக்கிய கட்டத்தில் உள்ளதாகவும், மனுதாரர்களை பிணையில் வெளியேவிட்டால் அவர்களது உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடும் என்றும் நீதிபதி கூறினார். (த)

100 ஆவது நாள் நினைவஞ்சலி

நல்லூர் மண்ணில் தவழ்ந்து மடியில்:
01 — 02 — 1963

ஜேர்மனியில் இறைவன் அடியில்:
03 — 08 — 1991

ரவீந்திரன் மைதிலி

மழலை மாறாத செல்வங்களும், மரகதபுமிகு சகோதரர்களும் சதறித் துடிக்கையிலே ஏனம்மா காலனுடன் சென்றாய்? நெற்றமனம் பற்றி எரியுதம்மா! எத்தனையும் சென்றாலும் எங்கள் குலவிளக்கே உன் நினைவு வாட்டுமம்மா. உன் ஆத்ம சாந்திக்கு நல்லூரானை வேண்டுகின்றோம்.

என்றும் உன் பிரிவால் வாடும்:
தாய், சகோதரர்கள்,
அன்றிமார்.

511, நல்லூர். (18444)

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
02 — 03 — 1937

இறைவன் அடியில்:
05 — 11 — 1986

செல்லத்துரை சுப்பிரமணியம்
[இராவணன்]

திதி: 10 - 11 - 1991

சந்தனமாய் சேய்ந்து சகோதரர்க்காய் உழைத்தவரே
ஊரவரிடம் விஷ்கி மணியம் எனப் பெயர் பெற்று
உறவினர்க்கு உதவி செய்தவரே!
பாதி வயதினிலே பறி கொடுத்தேன்
வாழைக் குலையேற்றி வரச் சென்று
வாழ்வதனை முடித்திரே
ஐந்தாண்டு சென்றாலும் ஆறாது எம் கவலை
ஆத்ம சாந்திக்கு நல்லூரானை வேண்டுகின்றேன்

உங்கள் நினைவால் வாடும்:
மனைவி, பெறாமக்கள்.

511, நல்லூர். (18443)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.

அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழகத்திற்கு முதலாம்தர மரத்தினால் செய்யப்பட்ட இலச்சினைகள் வழங்குவதற்கு பின்வரும் மூன்று தேவை விவரங்கள் அனுபவமுடையவர்களிடமிருந்து, குறிப்பாகச் கிற்பாசாரியர்களிடமிருந்து கோரப்படுகின்றன:

1. முழுப் பெயர்:-
2. தொழில் புரியும் முகவரி:-
3. முன்னைய அனுபவம்:-

மேற்குறிப்பிட்ட மூன்று தேவைகளைத் திருப்தி செய்து எம்மால் அங்கீகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளிடமிருந்தே கேள்விப் பத்திரம் அழைக்கப்படும்.

மேற்கூறப்பட்ட விவரங்களை "நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 1991 - 11 - 22 ஆம் திகதியன்று காலை 10 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கவும். இக் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "யாழ். பல்கலைக்கழக இலச்சினை வழங்குவதற்கான முன் தேவை" என்க் குறிப்பிடவும்.

– பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (கி/0784)

ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
03 — 05 — 1919

இறப்பு:
22 — 10 — 1990

பிரம்மஸ்ரீ சி. நாராயண சாஸ்திரிகள்

நாராயண சாஸ்திரிகள் என்னும் நாம
நூலோனும் சிவபதத்தில் பேறு பெற்றே
ஓராண்டு நினைவான அஞ்சலியை உளமாரச்
செலுத்தி யன்னார் ஆத்ம சாந்தி
பாராயணம் செய்த பரமன் பாதம்
பக்குவமாய் முத்தி நிலை அருளவேண்டி
ஆராவமுத நனைய அன்னை பதம் வரை
அஞ்சலியாம் மலர்களினால் அர்ச்சிப் போமே

இங்கனம்
குடும்பத்தினர்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(18703)

உதயன்

தொடர வேண்டும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உணவுப் பஞ்சம் உருவாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் எச்சரித்திருக்கிறார்!

கையிருப்பில் உள்ள உணவுப் பொருள்கள் முடிவுற்று வருகின்றன. தனியார் வர்த்தகர்கள் வசம் உள்ள பொருள்கள் ஆகக்கூடியது ஒரு வாரத்துக்கு மட்டுமே போதும். காலநிலை சீரில்லாததாலும், உபகரண வசதி குறைந்துள்ளதாலும் பருத்தித்துறைக்குக் கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் கொண்டு வரப்படுவது எந்நேரமும் தடைப்படலாம் என்று அவர் சொல்கிறார்.

பதினேழு மாதங்களுக்கு முன்னர் யுத்தம் ஆரம்பமானதில் இருந்தே, தமிழ்ப் பகுதிகளில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு விட்டது. அரசாங்கம் தமிழர் மீது விதித்த பொருளாதாரத் தடையோடு உணவுப் பற்றாக்குறை பெரும் கட்டுப்பாடு நிலையாக மாற்றம் கண்டது.

தமிழ்ப் பிரதேசங்கள், தனது நாட்டின் ஒரு பகுதி என்று உரிமை கொண்டாடிக் கொண்டே, அரசாங்கம் அங்கு வாழும் மக்களைப் பட்டினி போட்டுத் தண்டிக்கத் திட்டம் போட்டது. அதன் விளைவாக வடபகுதி மக்களின் உணவுத் தேவையில் மூன்றில் ஒரு பகுதியைத் தான் அரசு அனுப்பி வைத்துக் கொண்டிருக்கிறது.

தெற்கில் இருந்து வரும் உணவுப் பொருள்களின் அளவு குறைக்கப்பட்டுவிட்டால் உள்ளூர் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியமும், மாற்றுணவு வகைகளை உட்கொள்ள வேண்டிய தேவையும், எமது மூதாதையினரின் உணவுப் பழக்க வழக்கங்களை மீண்டும் கைக்கொள்ளவேண்டிய தேவையும் உண்டாயிற்று.

அந்தத் தேவையை உணர்ந்து, நிலைமையை மனதார உணர்ந்து சூழ்நிலைக்கு ஏற்ப மக்கள் தம்மை மாற்றிக் கொள்ள முன்வந்தார்கள். எள்ளு, பயறு, கௌபி, மரவள்ளி, குரக்கன் ஆகியமாற்றுப் பயிர்ச் செய்கைகளிலும் நாட்டம் கொண்டனர். அதன் பெறுபேறாக திருப்திப்படக்கூடிய அளவுக்கு உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் விளைந்தன.

எனினும் உள்ளூர் உற்பத்தி, சுயதேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு முழு அளவை எட்டிப் பிடிக்கவில்லை.

முழுக்க முழுக்க உள்ளூர் மூல வளங்களையும், மனித வளத்தையும் பயன்படுத்தி எமது பிரதேசத்தின் உற்பத்தியைப்பெருக்க வேண்டும். எமக்கு பயன் தரக் கூடிய புதிய வளங்களை இனங்காண வேண்டும் உற்பத்தியைப் பெருக்குவதை இலக்காகக் கொண்டு இடைவெளி இல்லாமல் உழைத்தால் — நிலத்துடன் போராடினால் — மட்டுமே அடிக்கடி பட்டினி நிலைமை தோன்றுவதைத் தடுக்க முடியும். அதற்கு திட்டமிட்ட செயற்பாடும், கடும் உழைப்பும் தேவை.

உற்பத்திப் போர் முழு முனைப்புடன் இடைவிடாது தொடர்ந்து, நிரந்தரமாக நடக்க வேண்டும்.

அமைச்சரவையில் மாற்றம்

கொழும்பு, நவ 10

நாடாளுமன்றத்தில் நாளை மறுதினம் தாக்கல் செய்யப்படும் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் — அனேகமாக அடுத்த மாதத்தில் — அமைச்சரவையில் பெரிய மாற்றம் நிகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய முகங்கள் பல அமைச்சரவையில் இடம் பெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் இந்த ஊகத்தை வெளிவிட்டன. (உ-எ)

ஒரு நாள் சார்க் மாநாடு; பிரதமர் ராவ் பங்குபற்றுவார்

புதுடில்லி, நவ. 10

கொழும்பில் ஒரு நாள் 'சார்க்' மாநாடு நடைபெற்றால் அதில் நிச்சயம் தான் பங்கு பற்றப் போவதாக இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவ் அறிவித்துள்ளார்.

நேற்று கோவாவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

'சார்க்' மாநாடு ஒத்திவைக்கப்படுவதற்கு இந்தியாவே காரணம் என்ற குற்றச்சாட்டை அவர் மறுத்தார். (உ-த)

தமிழ் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், நவ. 10

திருநெல்வேலி மாவட்டம் செட்டியாவெளி என்ற இடத்தில் கடந்த வியாழக்கிழமை ஸ்ரீலங்காப்படையினர் தமிழ் மக்கள் ஒருவரைக் சுட்டுக்கொன்றனர்.

கட்டைபறிச்சானைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மார்க்கண்டு மகேந்திரராசா (32 வயது) என்பவரே கொலையுண்டவர் ஆவார். [ஒ]

வருமானவரிச் சட்டத்தில் தளர்வு

கொழும்பு, நவ. 10

மாதம் 3,500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களே இனி வருமான வரி செலுத்த வேண்டும் அதற்கு ஏற்ற வகையில் வருமான வரிச் சட்டத்தில் தளர்வு செய்யப்படவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [உ-எ]

அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 10

மாவிரர் வாரம் தொடர்பாக பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடல்கள் கோட்டரீதியாக நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் (செவ்வாய்) முற்பகல் 10 மணிக்கு யாழ் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கு யாழ் இந்துக்கல்லூரியிலும்—

பிற்பகல் 2 மணிக்கு வேலணை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் கலந்துரையாடல் நடைபெறும். [ஒ]

வெங்கட்ராமனுக்குக் கறுப்புக் கொடி

சென்னை, நவ 10

நேற்று சென்னைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி வெங்கட்ராமனுக்கு கறுப்புக் கொடி காட்ட முயன்ற திராவிடர் கழகம் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றைச் தொண்டர்கள் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

விஜேவீராவின் வீட்டிலிருந்து கைப்பற்றிய பணம் மத்திய வங்கியிடம்

கொழும்பு நவ. 10

ஜே. வி. பி. தலைவர் ரோஹண விஜேவீரரவை கம்பளை - உலப்பனை வீட்டில் வைத்துக் கைது செய்தபோது, அவ்வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட 4 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பணம் மத்திய வங்கியிடம் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

மேல்நீதிமன்ற உத்தரவின் மீது இது இடம் பெற்றது; அப்பணம், அலுமாரி ஒன்றில் காணப்பட்ட இரகசிய அறை ஒன்றினுள் இருந்து கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. [த-எ]

ஜேர்மனியில் தாக்குதல்

கிழக்கு ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்த 60 வெளிநாட்டவர்கள் தங்கியிருந்த விடுதி ஒன்றை சுமார் 200 வலதுசாரி தீவிரவாதிகள் அண்மையில் எறிகளால் தாக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அச்சம்பவத்தைத் தொடர்ந்து அவ்விடுதியில் தங்கியிருந்த வெளிநாட்டவர் அனைவரும் பொலீஸாரால் வேறு இடத்திற்குக் கொண்டுபோகப்பட்டனர் என்று அதிகாரிகள் கூறினர். [ஒ-எ]

ஷார்ஜா கிரிக்கெட் போட்டியில்

இலங்கை நடுவர்களின் தீர்ப்பால் பாகிஸ்தான் இந்தியாவை வென்றது!

கராச்சி, நவ. 10

சென்ற மாதம் ஷார்ஜாவில் நடைபெற்று முடிந்த 3 நாட்கள் கலந்து கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இலங்கை நடுவர்களின் தீர்ப்பினால் பாகிஸ்தான் இந்தியாவை வென்றதாக சித்திரிக்கும் தொலைக்காட்சி நாடகம் ஒன்று பாகிஸ்தான் தொலைக்காட்சியில் அண்மையில் ஒளிபரப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்த நாடகத்தைத் தயாரித்த பாகிஸ்தானிய பிரபல நகைச்சுவையாளரான அன்வர் மக்சூதிக் என்பவரின் படைப்புகளுக்கு பாகிஸ்தானில் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 45 நிமிடம் ஒளிபரப்பான இந்த நாடகம் பாகிஸ்தானிய அதிகாரிகளுக்கு ஓர் இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (த)

ஆயுதங்களுடன்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு டோனியர் விமானமும் தரத்திச்சென்று வழிமறித்துப் பிடித்தன என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் 25 மீற்றர் நீளம் கொண்ட அந்த இரு படகுகளும் சிங்கப்பூரிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்று கொண்டிருந்தன என்றும்—

அப்படகுகளில் இருந்து யத்து விடுதலைப் புலிகளும் இலங்கை அகதிகளுக்கான போலி அட்டைகளை வைத்திருந்தனர் என்றும்—

கைதான பத்துப்பேரில் ஒருவர் முக்கிய புள்ளி என்றும்—இந்திய வானொலி மேலும் தெரிவித்தது.

இது இவ்வாறிருக்க, கடற்படையினர் துரத்திக்கொண்டிருக்கும்போது படகுகளில் இருந்து ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கடலில் வீசத் தொடங்கினர் என்றும்—

எனினும் அப்படகுகளில் இருந்து ஆயுதங்கள் பற்றிய பட்டியலை கடற்படையினர் வைப்பற்றினர் என்றும்—மற்றொரு செய்தி தெரிவித்தது. (ஒ-எ)

தென்னிலங்கை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களை உடனடியாக எடுக்குமாறும், இது விடயத்தில் அரசியல் மற்றும் தனிப்பட்ட கருத்துக்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம் என்றும் திரு. ராஜபக்ஷ ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறார்.

தென் பகுதியில் சட்ட விரோதச் சுவரொட்டிகள் காணப்படுகின்றன. மொரட்டுவை நகரசபைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது உள்ளே புகுந்த கோஷ்டி ஒன்று எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தாக்கி விட்டு மறைந்து விட்டது—என்றும் திரு. ராஜபக்ஷ தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜே. வி. பியை ஒழித்துக் கட்டுவதாகக் கூறி தென்னிலங்கையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட காலத்தில் இந்த மர்மப் பயங்கரவாதக் குழுக்களே பெருமளவில் இயங்கி வந்தன.

இந்த மர்மக் குழுக்கள் "பச்சைப் புலிகள்" என்று தம்மை அழைத்துக்கொண்டாலும், அதன் பின்னணியில் யார் நிற்கிறார்கள் என்பது கண்ணுக்குத் தெரியாத மர்மமாகவே இருந்தது.

எனினும் அரசாங்க சார்புடைய இராணுவக் குழு ஒன்றே இதற்குப் பொறுப்பு என்று பொதுவாகக் கருதப்பட்டது.

அதே "பச்சைப் புலிகள்" தான் மீண்டும் தெற்கில் நடமாடத் தொடங்கிவிட்டனவோ என்ற கருத்து இப்போது நிலவுகிறது. (அ-எ)

படையினர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தில் நிறுவப்பட்டுள்ளன.

திருகோணமலைக் காடுகளில் வறிமை வாய்ந்த தீவிரவாதிகள் அணி நடமாடுகிறது.

திருமலைக் கோட்டையை ராஜா துருபுகள் காவல் புரிகின்றனர். மாலை 6 மணிக்குப் பின்னர் பொதுமக்கள் கோட்டைக்குள் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கோணேஸ்வரம் ஆலயப் பிரதேசம் வெறிச்சோடிக் காணப்படுகிறது

கோவில் வாசலுக்கு வெளியே உள்ள பசுமை ஒன்றில் பூசகர் தனிமையில் உட்கார்ந்திருக்கிறார்.

இராணுவவாகன அணிகள் பிரதான முச்சந்திகளிலிருந்து வெளியே செல்லும்போது இராணுவக் காவல் பாதுகாப்பு வழங்கியவாறு செல்கின்றன.

திருமலையில் போக்கு வரத்து ஒழுங்குகளைக் கவனிக்க இராணுவம் சென்னை நிலைமிதந்துள்ளது. இராணுவக் காவல் பட்டாளியினைச் சேர்ந்த இப்பெண்கள் தானியங்கி ஆயுதங்களை வைத்துள்ளனர். தொழிலகள் கிபார்களைப் போன்றே அவர்கள் பணியாற்றுகின்றனர்.

இராணுவமும் பொலீஸும் சேர்ந்து இம் மாவட்டத்தில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். வெற்றிகரமான எதிர்த் தாக்குதல்களை விடுதலைப் புலிகளும் நடத்தி வருகின்றார்கள் என்று அச்செய்தியாளர் தமது கட்டுரையில் தெரிவித்துள்ளார். [அ-எ]

'சார்க்' குழம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பூட்டான் ஆகிய இரு துணை 'நடிகர்'களைப் பாவித்து இந்தியா நாடகமாடியுள்ளது.

ஆனால் தெற்காசியப் பிராந்தியத்தின் வல்லரசு என்று தம்பட்டமடித்துக் கொண்டு, பிற சிறிய நாடுகளைத் தமது அடியாட்களாகக் காட்டிக்கொள்ளும் இந்தியாவுக்கு, நெருக்கடிகளைக் கொடுக்க வேண்டும் என்பதுபோல் ஸ்ரீலங்கா அரசு நடந்து கொள்கிறது.

எது எப்படியோ, மீண்டும் இந்தியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்கும் இடையே மீண்டும் ஒரு பனிப்போர் தொடங்கியுள்ளது —இப்படி வெளிநாட்டு வானொலி தெரிவித்தது. [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

திருமதி நல்லம்மா செல்லத்துரை

மூளாயைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை செல்லத்துரையின் மனைவி நல்லம்மா 9-11-91இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற நியாதராசா [R. M. P.], சந்திரசேகரம், சரஸ்வதியம்மா [ஆசிரியை, மூளாய் அ. மி. த. க. பாடசாலை], சிவபாக்கியம் [மலேசியா] ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகபூஷணி [ஓய்வுபெற்ற ஆசிரியர்], வரதராசா [ஓய்வுபெற்ற இலிகிதர்], காலஞ்சென்ற பாரிஸ்டர் செல்லையா பரஞ்சோதி [மலேசியா] ஆகியோரின் அன்பு மாமியாரும், யசோதை, ஞானசேகரன், மனோராரி, கலைச்செல்வி, மீனா, இராஜேஸ்வரன், ரூபன்குமார் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-11-91 இன்று காலை 10 மணியளவில் மூளாயில் நடைபெறும்.

தகவல்:
திருமதி வரதராசா
[மகள்]

மூளாய்,
சுழிபுரம். [18445]

திருமதி அன்னபாக்கியம் ஐயாத்துரை

வர்த்தலைவிளானைச் சேர்ந்த திருமதி அன்னபாக்கியம் ஐயாத்துரை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் பொன்சுந்தரம் ஐயாத்துரையின் பிரிய மனைவியும், காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை—தங்கம் தம்பதியரின் கிரேஷ்டபுதல்வியும், காலஞ்சென்ற ஆசிரியர்களான இராசநாயகம், அருமைநாயகம், ரோகினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆசிரியைகள் நாகம்மா, திருமதி அருமைநாயகம் மற்றும் ஓய்வுநிலை அதிபர் வே. க. நடராசாவின் அன்புமைத்துனியும் ஆவார். அன்னாரின் சமக்கிரியைகள் வைகறியில் நடைபெற்று பூதவுடல் வைகறி தெற்கு மயானத்தில் 8-11-91 இல் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சிவபாதசிங்கம்

வர்த்தலைவிளான்,
தெல்லிப்பளை. (4387)

கஸ்பாறு தொம்மாசி

நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது அரியாலை கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி கஸ்பாறு தொம்மாசி அவர்கள் தனது 79 ஆவது வயதில் 09 - 11 - 91 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. ம. கஸ்பாறு அவர்களின் அன்பு மனைவியும், இராசதுரை, செல்வி யுஸ்ரீனா [வேலணை தெ. ம. பெ. உ. வி. க. ச. கணக்காளர்), லூரியா ஆகியோரின் அன்புத் தாயாரும், கிங்ஸ்லி, பேரசேபு ஆகியோரின் அன்பு மாமியாரும், எடமன், ஸ்கொலஸ்ரிக்கா, அன்ரன்றேமன் [இத்தாலி], றூபினா [இத்தாலி], அன்ரன் றொபேட் [ஜேர்மனி], ரவி, ரகு [ஜேர்மனி], ரவி, ரவிசா, ரகுசா, ரவி, ரவிதா, விஜிதா ஆகியோரின் பேர்த்தியும், ரஜிவி, டயானா, பிரபாகர், பிரசாத் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக (10 - 11 - 91) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புனித செஞ்சேஞ்சியாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. ஜோர்ஜ் எட்மன்
[பேரன்]

அரியாலை கிழக்கு,
யாழ்ப்பாணம். [18712]

நவம்பர் மாத ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான நவம்பர் மாத பென்சன் வவுச்சர்கள் அடுத்து வடக்கே வரும் கப்பலில் எடுத்து வரப்படவிருக்கின்றன.

அதே சமயம் நவம்பர் மாத ஓய்வூதியம் வழங்குவதற்குத் தேவையான கட்டு நிதியை இயன்ற விரைவில் இலங்கை வங்கியின் யாழ்: கிளைக்கு அனுப்ப திறைசேரி இணக்கம் தெரிவித்திருப்பதாக செயலக பிரதம கணக்காளர் தெரிவித்தார். [உ-8]

இறந்தவர்கள் எண்ணிக்கை 190

புதுடில்லி, நவ: 10

புதுடில்லியில் அதிக சாராயம் கலந்த மருந்து அருந்திய சம்பவம் தொடர்பாக நீதி விசாரணை ஒன்றிற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 164 ஆக உயர்ந்து விட்டது. காயமடைந்தவர்களில் 105 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும் இறந்தவர்களின் எண்ணிக்கை 190 என்று அதிகாரபூர்வமற்ற செய்திகள் கூறுகின்றன. [த]

இன்று

யாழ்ப்பாணம், நவ. 10

வலிகாமத்தைச் சேர்ந்த அனைத்து மாணவர் இயக்கப்பாளர், ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள், தொடர்பாளர்கள் கொத்தணித் தொடர்பாளர்கள் மற்றும் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஒ)

புங்குடுதீவு கொத்தணி பிரிவு மாணவருக்கு

யாழ்ப்பாணம், நவ: 10

புங்குடுதீவு கொத்தணிப் பிரிவைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மாணவர்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் அவர்களுக்கான வகுப்புகள் ஆரம்பமாகும் என்று புங்குடுதீவுக் கொத்தணி அதிபர் அறிவித்துள்ளார். (த-5)

பன்னலவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"நிவயின" கிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை—

குண்டுவெடிப்புச் சம்பவத்துடன், வடமேற்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கும் அவரது மெய்க்காப்பாளர் ஒருவருக்கும் சம்பந்தம் உண்டா என்பது குறித்து பொலீஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். [ஒ-10]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள எங்கள் நிலையத்தில் 10-11-1991 தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

'சார்க்' விதிகள் மீளாய்வு: பிரேமா - ஷெரீப் சியார்சு

கொழும்பு, நவ. 10

"சார்க்" அமைப்பிற்கான விதிமுறைகள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

நேற்று முன்தினம் இரவு இருதரப்புப் பேச்சு நடத்திய ஸ்ரீலங்கா ஜனாதிபதி அதிபர் பிரேமதாஸாவும், பாகிஸ்தான் ஜனாதிபதி நவாஸ் ஷெரீப்பும் இப்படி கூட்டாகக் கருத்து வெளியிட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (உ-3)

3,500 வைத்தியர்கள் தெற்கில் வேலைநிறுத்தம்

கொழும்பு, நவ: 10

தென்னிலங்கையில் 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

இதனால் தெற்கிலுள்ள 852 வைத்தியசாலைகளில் 556 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன என்றும் அவற்றில் அனேகமானவை கிராமிய வைத்தியசாலைகள் என்றும் பி. பி. ஸி. அறிவித்தது.

உதவி வைத்தியர்களும், பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களுமே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் தமக்குப் பதவி உயர்வு, கல்வி உயர்வு வாய்ப்புக்கள் அளிக்கப்படுவதில்லை என்று ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கைக்கு சுகாதார அமைச்சிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்காததாலேயே வேலை நிறுத்தம் தொடர்வதாக அகில இலங்கை உதவி வைத்தியர்கள் சம்மேளனத்தின் தலைவர் என். இலங்கிங்க தெரிவித்துள்ளார். [ஒ-10]

தேர்தலின்போது

ஜனாதிபதி யார் என்பதை தமிழர்களே முடிவு செய்வர்

அனுரா பண்டாரநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, நவ 10

"ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது யார் என்பதைத் தமிழர்களின் வாக்குகள் தான் முடிவு செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

இதனைக் கருத்திற்கொண்டே தமிழர் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்."

—இப்படிக் கூறுகிறார் பதில் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா.

கொழும்புப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

தமது கட்சியின் அதிருப்தியாளர்களின் பக்கம் சார்ந்துள்ள மக்களின் வாக்குத் தொகையின் இழப்பை ஈடு செய்வதற்காக ஜனாதிபதி பிரேமதாஸா இன்று தமிழ் சமூகத்தினரின் பக்கம் திரும்பி அவர்களது முற்றுமுழுதான ஆதரவை வேண்டி நிற்கிறார்.

இதனைக்கருத்திற்கொண்டே நாம் தமிழர்களது அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்துகிறோம்.

இனப் பிரச்சினைக்கு சரியான தீர்வு ஒன்றை நாம் காணுவோம் — என்றார். [உ-8]

ஆனையிறவில் துப்பாக்கிச் சூடு!

யாழ்ப்பாணம், நவ. 10

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 7 மணி முதல் கொம்படி, ஊரியான், இயக்கச்சிப் பக்கங்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

அவ்வப்போது "பரா" வெளிச்சக் குண்டுகளும் ஏவிவிடப்பட்டன. (உ-15)

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சுந்தரம் மகேந்திரநாதன்



ஜனனம்:- 04 - 11 - 1942
மரணம்:- 13 - 11 - 1988

திதி:- 10 - 11 - 1991

((()))
|

பாரத இராணுவத்தால் கொலைக்காக அங்கீகரிக்கப்பட்ட பாதகம் கும்பலினால் உமை இழந்து ஆண்டு மூன்று ஆனதையா.

உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

வளாக வீதி,
திருநெல்வேலி.

மனைவி, மக்கள்,
சகோதரர்கள், மைத்துனர்.

(C/0890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org